**MCOP NO:2410/2024** **DATE: 06.08.2026**

எ.ம.சா : 1

பெயர் : திரு.ஸ்ரீனிவாசன்

த/பெ : திரு.முத்துராமகிருஷ்ணன்

வயது :49

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 06.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எமசாஆ 1 முதல் 8 வரை தாக்கல் செய்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் மனுதாரருக்கு விபத்து ஏற்படுத்திய 1 ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா இல்லையா என்று தெரியாது என்றால் சரிதான். எமசாஆ 2 ல் சொல்லப்பட்டுள்ள விதிமுறை மற்றும் நிபந்தனைகள் பற்றி மனுதாரருக்கு நேரடியாக தெரியாது என்றால் அது பொறுத்து எனக்கு தெரியாது. எமசாஆ 2 ல் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒப்பந்தமானது எங்கள் நிறுவனத்திற்கும், 1 ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்டுள்ளது என்பதால் அது மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு வழங்குவதன் நோக்கம் 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தினால் 3 ம் தரப்பினருக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு இழப்பீடு கொடுப்பதற்காக தான் என்றால் 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக இருந்தால் அது பொருந்தும். மனுதாரர் எங்கள் நிறுவனத்திற்கு 3 ம் தரப்பினர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் உள்ள காரணத்தினாலும் காயம் பட்ட நபர் 3-ம் தரப்பினர் என்பதாலும் எங்கள் நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.